INSTRUMEN CONTOH

LOGO SEKOLAH

NAMA SEKOLAH

# PT3 2014
## PENTAKSIRAN TINGKATAN 3

**UJIAN BERTULIS**
**OKTOBER** **2 Jam**

# 33 Bahasa Tamil

**ARAHAN:**
1. Buka kertas soalan ini apabila diberitahu.
2. Tulis **nama** dan **angka giliran** anda pada ruang yang disediakan.
3. Jawapan anda hendaklah ditulis pada ruang jawapan yang disediakan dalam kertas soalan ini.
4. Kertas soalan ini hendaklah diserahkan kepada pengawas peperiksaan pada akhir peperiksaan.

| Untuk Kegunaan Pemeriksa | | |
|---|---|---|
| Nama Pemeriksa: | | |
| Bahagian<br>பிரிவு | Markah Penuh<br>முழுப்புள்ளி | Markah Diperoleh<br>பெற்ற புள்ளி |
| அ | 20 | |
| ஆ | 35 | |
| இ | 15 | |
| ஈ | 30 | |
| மொத்தம் | 100 | |

NAMA : ………………………………………………………………………………………

ANGKA GILIRAN : | | | | | | | | | | | | | | |

**Arahan:**

1. *Kertas soalan ini mengandungi dua bahagian*, *iaitu* **Bahagian A** *dan* **Bahagian B**.
2. *Jawab* semua *soalan dalam* **Bahagian A** *dan* **satu** *soalan daripada* **Bahagian B**.

**பாகம் 1**
[1 மணி 15 நிமிடம்]
**பிரிவு அ : இலக்கணமும் மொழியணியும்**
(20 புள்ளி)

1 **உயிர் எழுத்துகள்** 12. அவற்றை எழுதுக.

________________________________________

(1 புள்ளி)

2 **சேர்த்து எழுதுக.**

கனி + அமுதன்

________________________________________

(1 புள்ளி)

3 (அ) கொடுக்கப்பட்ட வாக்கியங்களிலுள்ள **பிழைகளை** அடையாளங்கண்டு அவற்றுக்கு **வட்டமிட்டுக்** காட்டுக.

i) உடற்பயிற்சிகளில் நடைப்பயிற்சி என்பது ஓர் சிறந்த பயிற்சியாகும்.

ii) புகைமண்டலமாக இருப்பதால் அனைவரும் சுவாசக்கவசம் அனிவது அவசியமாகும்.

iii) மு. வரதராசனார் தம்முடைய சிந்தனைகளை தமிழர் உணர வேண்டும் என விழைந்தார்.

(3 புள்ளி)

(ஆ) கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி.

i) கொடுக்கப்பட்டுள்ளனவற்றுள் **தன்வினை** வாக்கியத்தைத் தெரிவு செய்க.
A கண்ணன் புல்லாங்குழல் இசைத்தான்.
B வகுப்பறையில் ஆசிரியர் கற்பிக்கின்றார்.
C தாய் குழந்தைக்கு உணவு உண்பித்தர்.
D கண்ணன் புல்லாங்குழல் இசைப்பித்தான்.

(2 புள்ளி)

ii) உணர்ச்சி வாக்கியம் ஒன்றனை எழுதுக.

________________________________________

(3 புள்ளி)

4 (அ) கீழ்க்காணும் வாக்கியங்களுக்கு ஏற்ற மொழியணிகளைக் கொண்டு நிறைவு செய்க.

i) வெள்ளப் பேரிடரில் உடமைகளை இழந்த மக்களுக்கு அண்டை நாடுகள் வழங்கிய உதவி __________________ இருந்தது.

ii) தன் மகனை ஒரு மருத்துவராக்கிவிட வேண்டும் என்ற கனவை நனவாக்கத் திரு.முகிலன் ___________________ இன்றி உழைத்தார்.

iii) மணமக்களுக்குச் சீராக வழங்கப்பட்ட வெள்ளிப் பாத்திரங்கள் _________________ என மின்னின.

iv) தந்தை மகனிடையே ஏற்பட்ட தகராற்றில் தாயின் நிலை __________________ ஆனது.

v) இராணுவ வீரர்கள் அந்தத் தீவிரவாதியைப் பிடிக்கத் தீவிரமாக ______________.

(5 புள்ளி)

| | | |
|---|---|---|
| இருதலைக் கொள்ளி எறும்பு போல | தகதக | ஊண் உறக்கம் |
| இன்ப துன்பம் | ஊமை கண்ட கனா போல | செவி சாய்த்தனர் |
| பளபள | தீயும் பயிருக்குப் பெய்யும் மழை போல | வலை வீசினர் |

(ஆ) கீழ்க்காணும் திருக்குறளை நிறைவு செய்க.

சொல்லுதல் யார்க்கும் ....................................

........................................................

(2 புள்ளி)

(இ) கொடுக்கப்பட்டுள்ள செய்யுளின் பொருளை எழுதுக.

இயற்கையுண்மை வடிவினரே அணையவாரீர்
எல்லாங்செய் வல்லவரே அணையவாரீர்
இயற்கைவிளக் கத்தவரே அணையவாரீர்
எல்லார்க்கு நல்லவரே அணையவாரீர்

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

(3 புள்ளி)

## பிரிவு ஆ : கருத்துணர்தல்

(35 புள்ளிகள்)

**5** கீழ்க்காணும் கவிதையை வாசித்துப் பின்வரும் கேள்விக்கு விடையளிக்கவும்.

உலகம் என்பதோர் பள்ளிக்கூடம் – அதில்
ஒவ்வொரு நாளும் புதுப்பாடம்
சிலருக்கு வீடும் சிறைக்கூடம் – **கொடும்**
**சிறையும் அறிஞனின் கலைக்கூடம்**

அன்னையின் மடியில் அன்புப்பாடம் – நல்ல
தந்தையின் வழியில் பண்புப்பாடம்
கண்ணைத் திறந்திடும் கல்விப்பாடம் – வழி
காட்டிடும் ஆசான் சொல்லும்பாடம்

**— கவிஞர் செ. சீனி நைனா முகம்மது**

மேற்காணும் கவிதையில் கருமையாக்கப்பட்டுள்ள அடி உணர்த்தும் **கருத்து** யாது?

A அறிஞர்கள் கலைக்கூடங்களில் வாழ்கிறார்கள்.
B கொடுமையான சிறையில் அறிஞர்கள் கல்வியைப் பெறுகின்றனர்.
C எவ்விடத்திலும் அறிவுள்ளவர் கல்வியறிவைப் பெற்றுக் கொள்வர்.

(2 புள்ளி)

**6** கீழ்க்காணும் அறிவிப்பை வாசித்துத் தொடர்ந்து வரும் வினாவுக்கு விடை எழுதுக.

***அறிவிப்பு***

- ஒவ்வொரு நாளும் நடப்பதை வழக்கமாகக் கொள்ளுங்கள்.
- குடும்பத்தினரோடும் நண்பர்களோடும் நடந்து செல்லுங்கள்.
- நாளொன்றுக்குப் பத்தாயிரம் அடிகள் நடக்க உறுதி கொள்ளுங்கள்.
- நடைப்பயிற்சியின் விவரங்களைக் குறித்துக் கொள்ளுங்கள்.
- உங்கள் ஆற்றலுக்குரிய நடைப்பயிற்சியை அதிகரியுங்கள்.

**மலேசிய சுகாதார அமைச்சு**
**(மக்கள் ஓசை: 17 டிசம்பர் 2012)**

அ) மேற்காணும் அறிவிப்பின் **நோக்கம்** யாது?

______________________________________________

______________________________________________

(3 புள்ளி)

**7** கீழ்க்காணும் சூழலில் காணப்படுபவர்களுக்கு நீ கூறவிரும்பும் **அறிவுரை** யாது?

**உணவு விரயத்தைத் தடுப்போம்!**



**50 % உணவுகள் குப்பைத் தொட்டியில்….**

______________________________________________________

(2 புள்ளி)

**8** கீழ்க்காணும் சூழல் உணர்த்தும் **கருத்து** யாது?




______________________________________________________

______________________________________________________

(2 புள்ளி)

**9** கீழ்க்காணும் உரையாடலில் காமராஜரைப் பற்றி நாம் அறியக்கூடியது யாது?



காமராஜர் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தபோது ஓர் ஊரிலுள்ள பள்ளித் திறப்பு விழாவுக்கு வருவதைக் கேள்விப்பட்டுப் பலர் அவரை வரவேற்கச் சென்றனர். அப்போது ஆசிரியர் ஒருவர் அவருக்கு மாலை அணிவிக்க வந்தார்.

காமராஜர் : நீ துரைசாமி மகன்தானே?
ஆசிரியர் : ஆம் ஐயா.
காமராஜர் : இங்கே என்ன செய்கிறாய்?
ஆசிரியர் : பக்கத்துக் கிராமத்தில் ஆசிரியனாக இருக்கிறேன்.
காமராஜர் : மாலை போடுவதற்காகப் பள்ளிக்கூடத்தை விட்டு வந்துவிட்டாயா? எனக்கு மாலை போடுவது முக்கியமல்ல. பிள்ளைகளின் படிப்புதான் முக்கியம். உடனே பள்ளிக்குப் போ!

________________________________________

(2 புள்ளி)

**10** கீழ்க்காணும் சூழலில் கார்த்திக்கின் கூற்று எதனை உணர்த்துகிறது?



ஆரம்பக் கல்வியை அலோர்காஜா தமிழ்ப்பள்ளியில் தொடங்கிய நான், தற்போது புத்ரா பல்கலைக்கழகத்தில் உடல் கல்வித்துறையில் பட்டப்படிப்பை மேற்கொண்டு வருகிறேன். விளையாட்டில் ஈடுபட்டால் கல்வியில் கரைசேர முடியாது எனச் சிலர் நினைக்கின்றனர். ஆனால், கல்வியிலும் சிறந்து விளங்குவதற்கு விளையாட்டுத்துறை எனக்குப் பெரும்பங்காற்றி இருக்கிறது. ஏனோ தெரியவில்லை, பெற்றோர் சிலர் விளையாட்டுக்கு முட்டுக்கட்டைப் போடுகிறார்கள்!

\- கார்த்திக் (2010)

________________________________________

(2 புள்ளி)

**11** *கீழ்க்காணும் உரைநடைப்பகுதியை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.*

இன்றைய உலகம் கல்வி உலகமென்றே சொல்லி விடலாம். முன்பு, அறிவு வளர்ச்சிக்கு மட்டுமே அடிப்படையாக இருந்த கல்வி, இன்று மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கும் ஆதாரமாக விளங்குகிறது. கல்வியில் இன்று மகத்தான மாற்றம் ஏற்பட்டுள்ளதால் அறிவு வளர்ச்சியின் வேகமும் என்றுமில்லாத அளவுக்கு வளர்ந்துள்ளது. கல்வியின் வளர்ச்சி துரிதமாக இருப்பதால் இன்று நாம் கற்கும் பல தொழில்நுட்பங்கள் இன்னும் சில ஆண்டுகளில் பழையன ஆகிவிடும்.

எனவேதான், இன்று கல்வி வாழ்நாள் முழுவதும் கற்க வேண்டிய ஒன்றாக ஆகிவிட்டது. கற்று மேல்நிலையில் உள்ளவர்கள் கூட பல பயிற்சி வகுப்புகளில் பங்குபெற்றுத் தாங்கள் சார்ந்த துறை அறிவைப் புதுப்பித்தும் வளர்த்தும் வருகின்றனர். ஆகையால், கல்வி என்பது பள்ளி அல்லது கல்லூரி போன்ற இடங்களில் மட்டுமின்றி அலுவலகம், தொழிற்சாலை என எல்லா இடங்களிலும் எல்லாச் சூழ்நிலைகளிலும் நடைபெற வேண்டிய ஒன்றாக மாறிவிட்டது.

அ) இக்காலக் கல்வியில் ஏற்பட்டுள்ள மாற்றம் யாது?

________________________________________

________________________________________

(3 புள்ளி)

ஆ) இரண்டாம் பத்தி வலியுறுத்தும் கருத்து யாது?

________________________________________

________________________________________

(4 புள்ளி)

இ) எதிர்காலத்தில் கல்வியின் நிலை எவ்வாறு இருக்கும் என நீ ஊகிக்கிறாய்?

________________________________________

________________________________________

(4 புள்ளி)

**12** *கீழ்க்காணும் சிறுகதையை வாசித்துத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.*

தீபாவளியை முன்னிட்டுப் பெற்றோருக்குத் துணிகளை வாங்கிக்கொண்டு கூட்ட நெரிசலில் அந்தத் தெருவில் நடந்தான் மோகன். நாளையே ஊருக்குக் கிளம்ப வேண்டும். சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாமல் வாங்க வேண்டிய பொருள்களைத் தேடிப்பிடித்து வாங்கிக் கொண்டிருந்தான்.

பசி வயிற்றைக் கிள்ளியது. தெருவின் வலப்புறத்தில் பெரிய உணவகம். உள்ளே புகுந்தான். மதிய உணவைச் சுருக்கமாக முடித்துக் கொண்டான். உள்ளே போகும்போது இரண்டு பெண் பிச்சைக்காரர்களிடம் இருந்து தப்பியவனால் இப்போது முடியவில்லை. அவர்கள் இடை மறித்தார்கள். இரண்டு பெண்களின் கைகளிலும் இரண்டு குழந்தைகள். சோகமான முகத்தை வைத்துக்கொண்டு பிச்சை கேட்டுக் கெஞ்சினார்கள். மோகன் இல்லை என்று மறுத்தான். அவர்களின் கெஞ்சல் தொடர்ந்தது. காலைப் பிடிக்காத குறை. மனத்தில் இரக்கமற்றவனாய் அவர்களை விரோதிகளாகப் பார்த்தான். அவர்களும் கெஞ்சலை நிறுத்தவில்லை. கோபத்தின் உச்சத்தில் மோகன் அவர்களைத் திட்டினான்.

"ஒரு வெள்ளிகூட கொடுக்காத இவன் நம்மைவிட பெரிய பிச்சைக்காரனாய் இருப்பான் போலிருக்கே!" என்று அவனது காதுபடவே பேசினார்கள். மோகன் அதைக் கண்டு கொள்ளவில்லை. நடந்தான். சாலையின் இடப்புறத்தில் உடம்பில் எலும்புகள் முட்டிக்கொண்டிருக்கும் ஒல்லியான உருவம், நரைமுடி, சவரம் செய்யப்படாத வெண்தாடி, தோல்கள் சுருங்கிய உடல். குத்தவைத்து அமர்ந்திருந்தார் அந்தப் பெரியவர். சாலையைக் கடந்து அவரை நெருங்கினான் மோகன்.

அவர் பிச்சைக்காகக் கை ஏந்தியதாக மோகனுக்குத் தெரியவில்லை. அவரின் முன்புறம் எடைபார்க்கும் வட்டவடிவ கருவி மட்டும் வைக்கப்பட்டிருந்தது. அதன் எடை காட்டும் கண்ணாடியில், எடை பார்க்க முடியாத அளவிற்கு கீறல்கள். இடது புறம், "எடை பார்க்க ஒரு வெள்ளி" என்று எழுதப்பட்ட பலகை வைக்கப்பட்டிருந்தது.

அந்தக் கருவியில் ஏறி நின்றான் மோகன். கீறல்களுக்கிடையே உற்றுநோக்கிப் பார்த்த அவனது கண்களுக்கு அது எண்பது கிலோ காட்டியது. அவனது எடையைவிட பத்துகிலோ அதிகமாகக் காட்டியது என்பது அவனுக்குத் தெரியும். எடை பார்த்துவிட்டு இறங்கியவன், 10 வெள்ளித்தாளை எடுத்து நீட்டினான். அது 10 வெள்ளித்தாள் என்பதை மேலும் கீழும் உற்றுப் பார்த்துத் தெரிந்து கொண்டார் பெரியவர். பேச முயற்சி செய்தும் அவரின் குரல் காற்றோடு கலக்கவில்லை. ஐந்து விரல்களையும் காட்டிக் **கையை விரித்தார்**.

"ஒரு வெள்ளிக்குப் பத்து வெள்ளி கொடுத்தால் சில்லறை எப்படித் தருவது?" என்று பெரியவர் சொல்வதாக ஓரளவிற்குப் புரிந்துகொண்டான் மோகன். சிறிய புன்முறுவலோடு "சில்லறை வேணாம் தாத்தா " என்று சொல்லிவிட்டு அவரது விரல்களை தனது இரண்டு

கைகளால் மூடினான். மூடப்பட்ட தனது இரண்டு கைகளையும் மெதுவாகத் தூக்கி மோகனின் தலையில் வைத்தார் பெரியவர்.

- *இணையச் சிறுகதை*
(எடுத்தாளப்பட்டது)

அ) (i) இக்கதை **எங்கு** நடந்திருக்கக்கூடும்?

(2 புள்ளி)

(ii) மோகனின் **பண்புநலன்களுள்** இரண்டனைக் குறிப்பிடுக?

(2 புள்ளி)

ஆ) பிச்சைக்காரப் பெண்களுக்கு உதவாத மோகன் பெரியவருக்கு உதவினான். ஏன்?

(5 புள்ளி)

இ) **கையை விரித்தார்** எனும் சொற்றொடரின் சூழலுக்கேற்ற பொருளை எழுதுக.

(2 புள்ளி)

## பிரிவு இ : கருத்துரைத்தல்
(15 புள்ளி)

**13** *கீழ்க்காணும் படத்தைக் கூர்ந்து கவனித்துத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.*




(அ) இப்படத்தின் சாரம் என்ன?

________________________________________

(2 புள்ளி)

(ஆ) அச்சாரத்திற்கான **மூன்று** காரணங்களை எழுதுக.

________________________________________

________________________________________

________________________________________

(3 புள்ளி)

(இ) இது தொடர்பாக உமது **கருத்துரையை** 30 சொற்களில் எழுதுக.

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

(10 புள்ளி)

**பாகம் 2**
[45 நிமிடம்]
**பிரிவு ஈ : படைப்பாக்கம்**
(30 புள்ளி)

14 கீழே கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுள் **ஏதேனும் ஒன்றனைப் பற்றி 150 சொற்களில்** ஓர் எழுத்துப்படிவத்தை எழுதுக.

(i) கீழ்க்காணும் படம் தொடர்பாகக் **கருத்து விளக்கக்** கட்டுரை ஒன்றனை எழுதுக.



(ii) விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதில் ஆர்வமின்றி இருக்கும் உமது நண்பனுக்கு அதன் முக்கியத்துவத்தை விளக்கி ஒரு **கடிதம்** எழுதுக.

(iii) "இதுக்காக ஏன் நீ அழுவுற...? முயற்சி பண்ணு. குறைஞ்ச மார்க்குல தானே நீ பின்தங்கி இருக்கிற. அடுத்த தடவன்னு ஒன்னு இருக்கு... மறந்திடாதே. விழுறது எழுறதுக்குத்தான்னு படிச்சிருக்கில்ல... என்று கமலா சொல்லச் சொல்ல... எனத் தொடங்கும் **சிறுகதை** ஒன்றனை எழுதுக.

**KERTAS SOALAN TAMAT**